# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| மாவட்டம் : | இராமநாதபுரம் | காலம் : | 05/05/2018 | முதல் | 09/05/2018 |
|---|---|---|---|---|---|
| அறிக்கை எண் : | 035 /2018 | வெளியீட்டு நாள் : | 04/05/2018 | | |

| கடந்த கால வானிலை 01/05/2018 முதல் 03/05/2018 வரை | |
|---|---|
| காரணிகள் | கடந்த கால வானிலை |
| மழை (மி.மீ) | 0.5 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 35-37 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 28-30 |
| மேக மூட்டம் | 2-6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 75-84 |
| காற்றின் வேகம்(கி.மீ. / மணி) | 8-15 |

எதிர்பார்க்கப்படும் வானிலை (09-05-2018 8.30 மணி வரை )

| காரணிகள் | 05-05-2018 | 06-05-2018 | 07-05-2018 | 08-05-2018 | 09-05-2018 |
|---|---|---|---|---|---|
| | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
| மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 2 | 3 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 38 | 38 | 39 | 39 | 39 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 28 | 28 | 28 | 28 | 28 |
| மேக மூட்டம் | 4 | 4 | 2 | 2 | 2 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 80 | 80 | 80 | 80 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 65 | 65 | 65 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 14 | 14 | 15 | 15 | 15 |
| காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தென்மேற்கு | தென்மேற்கு | தென்மேற்கு |

**குறுஞ்செய்தி :**
வரும் 8ம் தேதியன்று ஒரு சில இடங்களில் மிக லேசான மழையும், 9ம் தேதியன்று லேசான மழையும் பெய்ய வாய்ப்புள்ளது. வானம் தெளிவாக காணப்படும். மணிக்கு 14 முதல் 15 கி.மீ வேகத்தில் தெற்கு மற்றும் தென்மேற்கு திசையில் காற்று வீசக்கூடும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : மிளகாய் & ( கால்நடை )**

தற்போது நிலவும் பருவநிலையில் மிளகாய் பயிரில் கடலைப் புழுக்களின் தாக்குதல் பரவலாக தென்பட வாய்ப்பு உள்ளது. இளம் புழுக்கள் இளம்தளிர் மற்றும் இலைகளை உண்ணும் வளர்ந்த புழுக்கள் காய்களில் துளையிட்டு உண்ணும். சேதப்படுத்தப்பட்ட காய்கள் மற்றும் வளர்ந்த புழுக்களை சேகரித்து அழிக்கவும். ஒரு ஹெக்டேருக்கு 15 “ஹெலி லூர்” இனக்கவர்ச்சிப்பொறி வைக்க வேண்டும். முட்டை ஒட்டுண்ணியான டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் ஒரு ஹெக்டேருக்கு 50000 என்ற அளவில் வாரம் ஒரு முறை என 6 முறை வயலில் விடவேண்டும். மேலும் 10 லிட்டர் தண்ணீருக்கு 6.0 கி ப்ளுபென்டையமைடு 20 WDG அல்லது 7.5 மி நோவல்லுரான் 10% EC என்ற அளவுகளில் ஏதேனும் ஒரு பூச்சிகொல்லி மருந்தினை கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

இடி மின்னல் மற்றும் காற்றுடன் மழை பெய்யும் நேரங்களில், விவசாயிகள் தங்கள் கால்நடைகளை பாதுகாப்பான இடங்களில் கட்டி வைக்கவும். மேலும் மின் கம்பம், தொலைபேசி கம்பம் மற்றும் மரத்தடிகளில் கால்நடைகளை கட்டுவதை தவிர்க்கவும்.